திருவள்ளூர் தொகுதி - திருத்தணி வருவாய் வட்டத்தை இரண்டாகப் பிரித்து

திருவாலங்காட்டில் புதிய வருவாய் வட்டம் உருவாக்கிடுவீர்!

சட்டப்பேரவையில் - வி.ஜி.இராஜேந்திரன் வலியுறுத்தல்!

சென்னை, ஏப்.9- சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது பேசிய திருவள்ளூர் தொகுதி கழக உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், "திருவள்ளூர் தொகுதி - திருத்தணி வருவாய் வட்டத்தை இரண்டாகப் பிரித்து திருவாலங்காட்டில் புதிய வருவாய் வட்டம் உருவாக்க அரசு முன்வர வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வரமாறு:-

வி.ஜி.இராஜேந்திரன்: திருவள்ளூர் தொகுதி, திருத்தணி வருவாய் வட்டத்தை இரண்டாகப் பிரித்து திருவாலங்காட்டில் புதிய வருவாய் வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வருவாய் வட்டத்தினைப் பிரித்து திருவாலங்காட்டைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை நாள் 962003ல் தெரிவிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச அளவுகோல்களான பரப்பளவு மற்றும் மக்கள்தொகை ஆகியவை பூர்த்தியாகாததால், திருத்தணி வருவாய் வட்டத்தினைப் பிரித்து, திருவாலங்காட்டைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

வி.ஜி. இராஜேந்திரன்: திருவள்ளூர் தொகுதி, திருத்தணி வட்டத்திலுள்ள 3 பிர்காக்கள் முழுவதையும் திருவள்ளூர் வட்டத்திலுள்ள 6 பிர்காக்களில் கடம்பத்தூர் பிரிவிலுள்ள மடத்துக்குப்பம், பானம்பாக்கம், ராமன் கோயில், சென்னாவரம் ஆகிய 4 வருவாய்க் கிராமங்களையும், அதேபோல் பாண்டூர் பிரிவிலுள்ள இராமஞ்சேரி, மேல்விளாகம், கீழ்விளாகம், களியனூர், குன்னவலம், காரனிசம்பட்டு, பட்டறைப்பெரும்புதூர் A, பட்டறைப்பெரும்புதூர் B, தோமூர் போன்ற வருவாய்க் கிராமங்களையும் இணைத்து திருவாலங்காட்டைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டார அலுவலகம் அமைக்கப்படுமா?

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தக் கோரிக்கையை அரசு கவனத்துடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் மனு கொடுக்கிற நேரத்தில் இப்படியெல்லாம் பிரித்து கொடுக்கவில்லை. எங்களுடைய கணக்கின்படி, வருவாய்க் கிராமங்கள் மொத்தம் 65

இருக்கின்றன. அதில், திருத்தணி மற்றும் திருவாலங்காட்டை இரண்டாகப் பிரிப்போமென்று சொன்னால், திருத்தணிக்கு 32 வருவாய்க் கிராமங்களும், திருவாலங்காட்டுக்கு 33 வருவாய்க் கிராமங்களும் வருகின்றன. ஆகவே, தகுதி இல்லையென்று சொல்லி, அதிகாரிகள் அரசாங்கத்தினுடைய கருத்தை அனுப்பியிருக்கிறார்கள்.

உறுப்பினர் அவர்கள், சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும் நேரத்திலே தாலுகா வேண்டுமென்று என்னிடம் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. முடிந்த அளவிற்கு உறுப்பினர் அவர்களுக்கு என்ன செய்ய முடியுமோ அதை இந்த அரசாங்கம் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வி.ஜி. இராஜேந்திரன்: அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி.

இன்று, முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் அனைவருக்கும் பட்டா வழங்கக்கூடிய சீரிய பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 70 ஆயிரம் பேருக்கு வருகிற 10 ஆம் தேதியன்று பட்டா வழங்கக்கூடிய நிகழ்ச்சியும் இருக்கிறது. இதுபோன்ற நிலையில், கடம்பத்தூர் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய அம்பேத்கர் நகரிலுள்ள மக்கள் கிட்டத்தட்ட 150 வருடங்களாக, அந்தப் பகுதியில் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலேயர் காலத்திலிருந்து அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நிலையில், அப்போது இரயில்வே பாலம் அமைக்கப்படும்போது அங்கு ஒரு குட்டை தோண்டப்பட்டு, மண் எடுக்கப்பட்டது. அது குளம் என்கிற classificationல் வந்ததால் நீர் நிலை என்று கருதப்படுகிறது. நான்கு தலைமுறைகளாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய அந்த மக்களுக்கு வகை மாற்றம் செய்ய வேண்டுமென்று, 2011-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்தில் அதற்கு வழிவகை செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியரிடமிருந்து அரசுக்குப் பரிந்துரை பெறப்பட்டது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், அப்படியே நிலுவையில் இருக்கிறது. ஆகவே, தயவு கூர்ந்து அதனை ஆய்வு செய்து, அது எந்த வகையில் இருக்கிறதோ, அப்படியே அதை நீங்கள் consideration‌ல் எடுத்து, அவர்களுக்கு பட்டா வழங்கிட வேண்டும்.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: உறுப்பினர் அவர்கள் சொல்வது நீர்நிலைக் குட்டையாக இருக்கிற காரணத்தினால் அதற்கு பட்டா வழங்காமல் இருக்கிறது. அதை ஆய்வு செய்கிற அந்தப் பணியை அதிகாரிகள் மத்தியில் சொல்லி செய்கிறோம். உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணை இருக்கிற காரணத்தால், நீர்நிலை புறம்போக்கு என்று அரசாங்கத்தினுடைய கணக்கில் இருந்தலே இன்றைக்கு பட்டா கொடுக்க முடியாமல் இருக்கிறது.

நீர்நிலை புறம்போக்கு என்று இருக்கின்ற இடங்களில் இன்றைக்கு குட்டையும் இல்லை, ஓடையும் இல்லை, களத்தில் இருக்கிற நமக்கு தெரிகிறது. ஆனால், உச்சநீதிமன்றம் அதை கணக்கில் எடுக்காமல் எங்கெங்கு நீர்நிலை புறம்போக்கு என்று இருக்கின்றதோ அந்த இடங்களில் பட்டா வழங்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கும், அரசாங்கம் அவர்களுக்காகப் போராடும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்' என்கிற முதல்வரின் உறுதிக்கு

உச்சநீதிமன்றம் வழங்கிய மாபெரும் வெற்றித் தீர்ப்பு!

அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை!

சென்னை, ஏப்.08-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற தாரக மந்திரத்தை பறை சாற்றுகின்ற வெற்றித் தீர்ப்பு உச்சநீதிமன்றம் வழங்கிய மாபெரும் வெற்றித் தீர்ப்பு என தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பி ட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

உச்சநீதிமன்றம் நேற்று (08.04.2025) மாபெரும் வெற்றித் தீர்ப்பை வழங்கி உள்ளது. தமிழ்நாடு அரசு பல்கலைக்கழக வேந்தர் நியமனம் உள்ளிட்ட பல மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

ஆனால், ஆளுநர் அவர்கள் ஒப்புதல் வழங்காமல் குடியரசு தலைவருக்கு அனுப்பிவைத்தார். இதில் காலதாமதம் ஏற்பட்டதன் விளைவாக மீண்டும் இந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. மீண்டும் மீண்டும் ஒப்புதல் வழங்காமல் குடியரசு தலைவருக்கு அனுப்பிவைத்தார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசு கொண்டு வருகின்ற ஒவ்வொரு தீர்மானத்திற்கும் ஆளுநர் அவர்கள் ஒப்புதல் வழங்க வேண்டும். இது சட்டமாமேதை டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வடிவமைத்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதியாகும், அரசியல் அமைப்பை கொஞ்சம் கூட மதிக்காமல் கிடப்பில் போட்டு தமிழ்நாட்டு மக்களை ஆளுநர் ரவி வஞ்சித்தார்.

இதனை தட்டிக் கேட்கின்ற விதமாக உச்சநீதிமன்றத்தை நாடி "அரசியல் அமைப்புச் சட்டத்தை ஆளுநர் மீறி வருகிறார் சட்டப்பேரவையில் கொண்டுவந்த மசோதாக்களுக்கு ஒப்புதல்

வழங்காமல் குடியரசு தலைவருக்கு அனுப்பி வைத்து காலம் தாழ்த்தி தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்து வருகிறார்" என தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

அதனைத் தொடந்து உச்சநீதிமன்றம் மாபெரும் வெற்றித் தீர்ப்பை வழங்கியுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசு சட்டமன்றத்தில் கொண்டுவருகின்ற மசோதாவிற்கு ஆதரவான தீர்மானத்திற்கு ஆளுநர் அவர்கள் கட்டாயம் ஒப்புதல் வழங்க வேண்டும் என்ற அரசியல் அமைப்பின் விதி இருக்கும்போது எப்படி குடியரசு தலைவருக்கு அனுப்ப முடியும் என்று கண்டனம் தெரிவித்து தமிழ்நாடு அரசு கொண்டுவந்த முக்கிய 10 மசோதாக்களுக்கு உச்சநீதி மன்றமே ஒப்புதல் வழங்கி சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்த மாபெரும் தீர்ப்பு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்' என்ற தாரக மந்திரத்தை பறை சாற்றுகிறது.

மாபெரும் வெற்றித் தீர்ப்பை வழங்கிய உச்சநீதி மன்றத்திற்கும், தமிழ்நாட்டு மக்களின் காவலராக திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மறு உருவம் தமிழ்நாட்டு மக்களின் காவலர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.

உடல் நலக் குறைவு! ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர்

ப.சிதம்பரம் - அகமதாபாத் மருத்துவமனையில் அனுமதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் - கார்த்தி சிதம்பரத்தை தொடர்புகொண்டு நலம் கேட்டறிந்தார்!

சென்னை, ஏப்.9-

ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம் அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக அகமதாபாத்தில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இச் செய்தி அறிந்து, அவரது மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான கார்த்திக் சிதம்பரம் அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.4.2025) தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு ப.சிதம்பரம் அவர்களின் உடல்நிலை குறித்துக் கேட்டறிந்தார்.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில், ஆளுநர் திருப்பி அனுப்பிய அனைத்து மசோதாக்களையும் நிறைவேற்ற வேண்டும் என்று வழங்கிய உச்சநீதிமன்ற தீர்ப்பை கொண்டாடும் வகையிலும், இந்த முயற்சிக்கு தீவிரமாக போராடி மாநில உரிமைகளை பெற்றுத்தந்த தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும், 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் கன்னியம்மன் கோயில் அருகே பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. வட்டச் செயலாளர் கே. கருணாகரன், எச். பீர்முகமது, பாலாஜி, மூர்த்தி, டி. நெல்சன் ராஜ்,எஸ். முத்துவேல், வடபெரும்பாக்கம் மைக்கேல், இ. கார்த்திக், பி. செந்தில், எஸ். ஜோசப், இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என் .அஜய் தென்னவன் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

அமைச்சர் ஆவடி சாமு நாசர் - மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் சிறப்புரை

எல்லாபுரம் தெற்கு ஒன்றியக் கழகக் கூட்டம்!

டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ பங்கேற்பு! ஆ.சத்தியவேலு ஏற்பாடு!

திருவள்ளூர் ஏப் 09;

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட எல்லாபுரம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் ஆ.சத்தியவேலு ஏற்பாட்டில் இன்று 09042025 மஞ்சாகரணை பகுதியில் உள்ள சமுதாயக் கூடத்தில் காலை 9மணி அளவில் நடைபெறுகிறது இதில் ஒன்றிய கழக நிர்வாகிகள் உதயசூரியன், அன்பு(எ)உதயகுமார் ராஜேஸ்வரி பாஸ்கர், குப்பன், வெங்கடாஜலம், கண்ணபிரன், தணிகாசலம், ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி மாவட்ட தலைவர் மு. பகலவன், மாவட்ட கழக நிர்வாகிகள் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி வேணு, எம்.எல்.ரவி, மு.கதிரவன், எஸ்.ரமேஷ், தேவேந்திரன், ஏ.வி.ராமமூர்த்தி, வெங்கடாஜலபதி, பா.செ. குணசேகர் , கே.சுப்பிரமணி பரிமளாவிஸ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் ஒன்றிய அவை தலைவர் டி.கே முனிவேல் தலைமை வகிக்கிறார் இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழும் தமிழர் நலத் துறை அமைச்சர் அமைச்சர் ஆவடி சாமு நாசர் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம் எஸ்கே.ரமேஷ்ராஜ், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே கோவிந்தராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்கள்

இதில் தலைமை சொத்துக்குழு பாதுகாப்பு துணை தலைவர் இ.ஏ.பி.சிவாஜி மாநில நிர்வாகி சி.எச்.சேகர் அழகிரி சதாசிவம் . ஜி.ஸ்டாலின், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன் ஏ.கே.சுரேஷ், ஏ.ஆர். டி. உதயசூரியன் மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள் முடிவில் ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் வல்லரசு, ராஜேஷ் , முனிவேல் , பழனி , நடராஜன் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இராயபுரம் புலவர் கி.தியாகராசன்
ஏப்ரல் 9 (2000)



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலம் தொட்டு, பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களுடன் திராவிடர் இயக்கத்தில் இணைந்து பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் தன்மானத் தொண்டராய் – பேரறிஞர் அண்ணாவின் பேரன்பையும் – தலைவர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் அன்பையும் பெற்றவர்.

தந்தை பெரியாரின் இல்லத்தில் தங்கி, 'குடிஅரசு' நாளிதழில் பணியாற்றியதோடு, கழகத்தின் "நம் நாடு" ஏட்டின் துணை ஆசிரியராகவும் பணியாற்றி இயக்கத் தொண்டாற்றியவர்.

இராயபுரம் பகுதியில் கழகம் வளர்ந்திட இயக்கத் தோழர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

நாள்	நேரம்	மண்டலம்	சட்டமன்றத் தொகுதி	இடம்
12.04.2025 சனிக்கிழமை	மாலை 4.00 மணி	1	தியாகராய நகர்	ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர்
13.04.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 10.00 மணி		மயிலாப்பூர்	மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர்
19.04.2025 சனிக்கிழமை	மாலை 4.00 மணி		அண்ணா நகர்	அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை
19.04.2025 சனிக்கிழமை	காலை 10.00 மணி	9	தூத்துக்குடி	கலைஞர் அரங்கம், தூத்துக்குடி
19.04.2025 சனிக்கிழமை	மாலை 4.00 மணி		கோவில்பட்டி	சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-04-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி